# ශ්‍රී ලංකා නැගෙනහිර විශ්ව විද්‍යාලයේ සෞන්දර්ය අධ්‍යයන පිළිබ’ද ස්වාමී විපුලානන්ද ආයතනය

**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை**

**SWAMI VIPULANANDA INSTITUTE OF AESTHETIC STUDIES,**
**EASTERN UNIVERSITY, SRI LANKA**



# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை - 2012
# Annual Report

# <u>தூரநோக்கு</u>

**சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை தூர நோக்கானது**

கேள்விசார் நோக்கு

தொடர்பில் அழகியல் துறை

புலங்களில் முதன்மை

பெற்ற நிறுவகமாக

விளங்குதல் ஆகும்

## பணிக்கூற்று

### சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை பணிக்கூற்றானது

தாம் தெரிவு செய்யும் அழகியல் புலம் சார் துறைகளில் அறிவையும் அளிக்கை திறன்களையும் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளத்தக்க பட்டதாரிகளையும், டிப்ளோமா தாரிகளையும், உருவாக்கும் அதேவேளை இலங்கையின் கலாசார பாரம்பரியத்தினை பேணுதலும் வளப்படுத்தலும் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிகளாக அமைகின்றன

# குறிக்கோள்கள்

## சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

**குறிக்கோள் :**

1. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பகிர்வு என்பவற்றில் அதி சிறந்த தன்மையினைப் பேணுதல்

2. மனிதவளங்கள், அடிப்படைக் கட்டுமானங்கள், மற்றும் ஏனைய வள அபிவிருத்தி என்பவற்றினூடாக நிறுவன ரீதியான இயலுமையை உயர்த்துதல்

3. இனங்களின் சமூக பொருளாதார மற்றும் கலாச்சார தேவைகளுக்கான சேவையினை வழங்குதல்

4. நல்லாட்சியினை நடைமுறைப்படுத்தலும் மேம்படுத்தலும்

# முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்

**அவைத் தலைவர்:**

டாக்டர்.கே.கோபிந்தராஜா உபவேந்தர், கி.ப.கழகம், இலங்கை

**பணிப்பாளர்:**

டாக்டர். கே. பிரேமகுமார் சு.வி.அ.க.நிறுவகம்

**துறைத் தலைவர்:**

பேராசிரியர். எம். செல்வராசா - கலை கலாச்சார பீடம், கி.ப.கழகம், இலங்கை

**ப.மா.ஆணைக்குழு உறுப்பினர்:**

பேராசிரியர். எஸ். மௌனகுரு

வண.பிதா. ஜோசெப்மேரி

வண. ஸ்ரீமத். சுவாமி சர்வரூபானந்தஜீ மகராஜ்

**பேரவை உறுப்பினர்:**

திரு. எஸ் அருமைநாயகம்

திரு. எம்.எம்.ம.ஃறூப் கரீம்

**மூதவை உறுப்பினர்:**

திருமதி. எம். நதிரா

திரு. எஸ் பாலேந்திரன்

**கல்விசார் அவை உறுப்பினர்:**

கலாநிதி எஸ். ஜயசங்கர்

செல்வி. எஸ்.சுப்பிரமணியம்

**நிதித்துறை பிரதிநிதி:**

திரு. எம். ராமமூர்த்தி (பணிப்பாளர், நிதி திட்டமிடல் அமைச்சு)

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (செயலாளர்):**

திரு. து. விஜயகுமார்

# வருடாந்த அறிக்கை

## 03. பணிப்பாளரின் மீளாய்வு:

### 3.1 சுருக்க அறிமுகம்:

சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியானது பிராந்திய அலுவல்கள் மற்றும் இந்து கலாச்சார அமைச்சினால், இராமகிருஷ்ண பரம்பரையில் உதித்த கிழக்கு மாகாணத்தின் பெரும் அறிஞராக விளங்கியவரும் விஞ்ஞானம், தமிழ் மற்றும் அழகியற் கலைகளிலும் பாண்டித்தியம் பெற்ற சுவாமி விபுலானந்த அடிகளின் ஞாபகமாக 29.05.1982ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிசன் மணிமண்டபத்தில் நிறுவப்பட்டது. சுவாமி விபுலானந்தர் அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் ஆவார். ஆரம்பகட்டத்தில் இக்கல்லூரியில் நான்கு வருடத்திலான டிப்போமா கற்கைகள் இசை மற்றும் நடனத் துறையில் நடாத்தப்பட்டது. 1982ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் கௌரவ செல்லையா இராசதுரை அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. 1986ம் ஆண்டு தொடக்கம் விரிவுரைகளும் பயிற்சி வகுப்புக்களும் மட்டக்களப்பு, நொச்சிமுனையில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் புதிய கட்டடத் தொகுதியில் தொழிற்பட ஆரம்பித்தது. (தற்போதைய சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகக் கட்டடத் தொகுதி)

கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதிலிருந்து சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியை இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன்கல்லூரியின் மாணவர்களினால் தொடர்ச்சியான மறியல் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பல்வேறு பொது நிறுவனங்களினதும் அழுத்தங்கள் காரணமாகவும் இக்கல்லூரியினை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது.

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியானது 20.04.2001ம் ஆண்டு அன்றைய உயர்கல்வி மற்றும் தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி அமைச்சுக்கு சம்பிரதாய ரீதியாக கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் கையளிக்கப்பட்டது. இதன்போது கல்லூரியின் சிறப்பு அடையாளத்தைப் பேணும்பொருட்டு சுவாமி விபுலானந்த அடிகளின் திருநாமம் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியானது 01.01.2002 அன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் வழிகாட்டலில் கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இசை, நடன மானிக் கற்கை நெறிகளுக்கான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் பட்டங்கள் வழங்கப்பட்டன.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இசை மற்றும் நடனத்தில் டிப்ளோமா பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொள்ளுவதற்கான இரண்டு வருட விலக்களிப்புச் சலுகை மூதவையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டது. அதேவேளை இணைத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான சம்பளம் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டது. 2001ம் ஆண்டிலிருந்து 2005ம் ஆண்டு வரைக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தினால் நிறுவகம் மேற்பார்வை செய்யப்பட்டது. கீழ்வரும் நபர்கள் நிறுவகத்தினை பல்கலைக்கழகத்தின் நிலைக்குத் தரமுயர்த்துவதன் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்பட்டனர். இக்காலகட்டத்தில் கல்வி, நிர்வாகம் தொடர்பான அடித்தளம் போடப்பட்டது.

- பேராசிரியர். ஆம்மன்கிளி முருகதாஸ்
  பீடாதிபதி, கலைகலாச்சார பீடம் (2001 - 2002)

- பேராசிரியர். சி.மௌனகுரு
  தலைவர், நுண்கலைத்துறை (2002 - 2004)

- திரு.பா.சுகுமார்
  தலைவர், நுண்கலைத்துறை (2004 - 2005)

அழகியல் கற்கைத்துறையில் உயர்கல்வியை முன்னேற்றி விருத்தி செய்யும் நோக்குடன் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24B என்னும் பிரிவின் கீழ் 2005.06.03ஆந் திகதிய 1395/22 இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் 2005.03.14ஆந் திகதி நிறுவப்பட்டது.

முதலாவது தொகுதி மாணவர்கள் 2005/2006 கல்வியாண்டில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டார்கள். சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் எல்லா ஆசிரியர்களும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் 2005ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கபட்டார்கள். குறிப்பிட்ட ஆசிரியர் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், ஏனைய ஆசிரியர்கள் தகுதிகாண் விரிவுரையாளர்களாகவும் இணைத்துக் கொள்ளப்பட்ட அதேவேளை ஏனையவர்கள் போதனாசிரியர்களாகவும் உள்வாங்கப்பட்டார்கள். ஆத்துடன் பின்வரும் மூன்று கற்கைத் துறைகளும் அங்கீகரிக்கப்பட்டது.

- கர்நாடக சங்கீதத்துறை
- நடன நாடகத்துறை
- கட்புல தொழிநுட்பத்துறை

நிறுவனத்தின் முதலாவது பணிப்பாளராக திருமதி.பாலாம்பிகை இராஜேஸ்வரன், MA.(Music), M.Phil (India) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 2005/03/14ந் திகதியிலிருந்து அமுலாக்கும் வரையில் தொடர்ச்சியாக இரு தடவைகள் நியமிக்கப்பட்டார். அவர் 23.04.2012ம் திகதியில் ஓய்வுபெற்றார். கலாநிதி க. பிரேமகுமார், சிரேஷ்ட விரிவுரையார், விவசாயபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்பவர் 19.04.2012ம் திகதி தொடக்கம் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 3.2 அமைவிடம்

மட்டக்களப்பு நகரிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி, நெச்சிமுனையில் இந் நிறுவகம் அமைந்துள்ளது.

2005/2006 கல்வியாண்டில் நிறுவனத்திற்கு முதலாவது தொகுதி மாணவர்கள் இசை மற்றும் நடன கற்கைகள் நெறிக்காக அனுமதிக்கப்படடார்கள். கல்வியாண்டு 2006/2007ல் இருந்து பின்வரும் நான்கு கற்கை நெறிகளுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

- இசை (கர்நாடக சங்கீதம்)
- நடனம் (பரதநாட்டியம்)
- நாடகமும் அரங்கியலும்
- கட்புலக் கலை

2012ம் ஆண்டின் மொத்த மாணவர் தொகை 856 ஆகும். கல்வியாண்டு 2011/2012இல் 221 மாணவர்கள் அனுமதிக்கப்படடார்கள். துறை ரீதியான மாணவர் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது.

- இசை (கர்நாடக சங்கீதம்) - 77
- நடனம் (பரதநாட்டியம்) - 43
- நாடகமும் அரங்கியலும் - 50
- கட்புலக் கலை - 52

### 3.3 சாதனைகள்

3.3.1. HETC திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக அபிவிருத்தி மானியத்தைப் பெறுவதற்கான திட்டவரைபு சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்வரும் பிரதான நான்கு துறைகளின் அபிவிருத்திக்காக 15 மில்லியன் ரூபா மானியம் வழங்கப்பட்டது.

- தகவல் தொழில் நுட்பவியலை விருத்தி செய்தல்
- ஆங்கிலக் கல்வித் திறனை விருத்தி செய்தல்
- மென்திறனை விருத்தி செய்தல்
- சமுக ஒற்றுமையை விருத்தி செய்தல்

#### 3.3.2. சிறந்த விருது

உயர்கல்வி அமைச்சின் திறன் காண் விருது வழங்கும் விழா – 2012 இல் கிழக்குப் பல்கலைக்கழகம், தமிழ்மொழிப் பிரிவில் 15 விருதுகளைப் பெற்றுக் கொண்டது. இவற்றில் சு.வி.அ.க. நிறுவகம் முதலாவது இடத்திற்கான நான்கு (04) விருதுகளையும் இரண்டாவது இடத்திற்கான மூன்று (03) விருதுகளையும் மூன்றாம் இடத்திற்கான மூன்று (03) விருதுகளையும்

பெற்றுக் கொண்டது. இதன் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகமானது தமிழ்மொழிமூலம் திறன் விருது வழங்கலில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

### 3.3.3. கலாச்சார பன்முகத்தன்மையூடாக சமூக ஒற்றுமை

கலாச்சார பன்முகத்தன்மையூடாக சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக சு.வி.அ.க. நிறுவகம் இலங்கையின் பல பாகங்களில் பல்வேறுபட்ட நடன மற்றும் கலாச்சார நிகழ்சிகளில் எமது மாணவர்கள் பங்கு கொண்டார்கள்.

### 3.3.4. கலாச்சார விழுமியங்களை பாதுகாத்தலும் முன்னேற்றுதலும்

சு.வி.அ.க. நிறுவகம் கடந்த 25 ஆண்டகளாக, பிரதேச மற்றும் தேசிய கலாச்சார விழுமியங்களை பாதுகாத்து முன்னேற்றுவதில் பிரதான பங்கினை வகித்தது. இந்த நோக்கத்தினை அடைவதற்காக நிறுவகம் பல்வேறுபட்ட நாட்டார் மற்றும் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

### 3.3.5. கலாச்சார நிகழ்வுகளினூடாக சமூகங்களுக்கிடையில் இணக்கப்பாட்டினை முன்னேற்றுதல்

எப்போதாவது உயர்மட்ட அரச அதிகாரிகள், அமைச்சர்கள் எமது பிரதேசத்திற்கு இணக்கப்பாட்டினை முன்னேற்றும் நோக்கில் வருகைதரும் போது எமது மாணவர்கள் எப்போதும் வரவேற்பு நடனம் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி பங்குபற்றியுள்ளார்கள்.

### 3.3.6. மகிந்த சிந்தனை நோக்கிய பங்களிப்பு

இலங்கையெங்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மற்றும் கலாபொல கண்காட்சி என்பவற்றில் எமது மாணவர்கள் பங்குபற்றி மகிந்த சிந்தனையில் முன்மொழியப்பட்ட நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் செயற்பட்டுள்ளார்கள்.

### 3.3.7. சமூக ஒற்றுமையினை முன்னேற்றும் பொருட்டு இணைந்த கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல்

சுமூக ஒற்றுமையினை முன்னேற்றும் நோக்குடன் எமது மாணவர்கள் இணைந்த நாடகப் பயிற்சியினை மக்கள் களரியுடனும் மற்றும் இணைந்த கலாச்சார நிகழ்வுகளை கட்புல மற்றும் ஆற்றுகைகள் பல்கலைக்கழகத்துடன் (UVAPA) இணைந்தும் செயற்படுகின்றார்கள்.

### 3.3.8. அதிமேதகு ஜனாதிபதி அவர்களை வரவேற்றல்

எப்போதாவது அதிமேதகு ஜனாதிபதி மட்டக்களப்பிற்கு வருகைதரும்போது நிறுவகத்தின் கராசார Band வாத்தியக் குழுவினர் வரவேற்பதில் கலந்து கொண்டனர்.

### 3.3.9. சமய சடங்குகளின் போது கலாச்சார நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

நிறுவகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மும்மதங்களின் சமய சடங்குகளின் போது கலாச்சார நிகழ்சிகளை எமது மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

### 3.3.10. தொழிற்பட்டறைகளை நடாத்துதல்

துறைசார் நிபுணர்களைக் கொண்டு எல்லாத் துறைகளிலும் தொழிற்பட்டறை மற்றும் கருத்தரங்குகளை மாணவர்களுக்காக நடாத்தியிருந்தமை.

## 3.4. பின்னடைவுகளும் அதற்கான நியாயப்படுத்தல்களும்

நிறுவகத்திற்கு சொந்தமாக ஆறு ஏக்கர் நிலத்துண்டு உள்ளது. அவை நிறுவனத்தின் விரிவாக்கங்களுக்கும் அபிவிருத்திக்கும் போதுமானதாக இல்லை.

இருநூறு மாணவர்களை உள்ளடக்குவதற்கான பெண்களுக்கான விடுதிவசதியை வழங்கும் திட்ட முன்மொழிவு வழங்கப்பட்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக காத்துக்கிடக்கின்றது. நிறுவனத்தின் அடிக்கட்டுமான வசதிகள் குறைவாகவே உள்ளது. புதிய கட்டுமான திட்டங்களுக்கான திட்ட முன்மொழிவு நிறுவனத்தின் பிரதான திட்டவரைபடம் (Master plan) தயாரிக்கப்பட்டபின்பு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## 3.5. எதிர்காலத் திட்டம்

தற்போதுள்ள கல்விசார் துறையினால் பின்வரும் பீடங்களாக தரமுயர்த்துவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

ஆ) இசைப் பீடம்
ஆ) நடனப் பீடம்
இ) நாடகமும் அரங்கியலும் பீடம்
இ) கட்புல, தொழிநுட்ப பீடம்

தொழிநுட்பக் கலையில் சிறப்புப்பட்டப் படிப்பினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் கட்புலத் தொழிநுட்பத் துறையிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள நான்கு கற்கைகளுக்குமான பாடத்திட்டத்தினை மீளாய்வு செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

| 04. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் 31.12.2012 இல் உள்ளபடி | | | | | |
|---|---|---|---|---|---|
| துறை | கற்கைநெறி | மொத்த மாணவர் தொகை | கல்விசார் ஊழியர் மொத்த தொகை | கல்விசாரா ஊழியர் மொத்த தொகை | மொத்த நிருவாக உத்தியோகத்தர் |
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | 279 | 13 | 01 | - |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | 171 | 05 | 01 | - |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | 202 | 05 | | - |
| கட்புல கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | 204 | 02 | - | - |
| நூலகம் | | - | 01 | 03 | - |
| நிர்வாகம் | | - | - | 11 | 03 |
| நிதி | | - | - | 05 | 01 |
| **மொத்தம்** | | **856** | **26** | **21** | **04** |

**குறிப்பு :**

அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகைக்கேற்ப கல்விசார் ஊழியர்கள் விகிதப் பொருத்தம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது, குறிப்பாக நடன, நாடகத்துறையிலும், கட்புலத்துறையிலும் இது காணப்படுகின்றது. ஆகவே மேலதிக கல்விசார் ஊழியர்களுக்கான பதவிகள் உருவாக்கப்பட வேண்டும். இதேவேளை எல்லா கல்விசார் திணைக்களங்களும் இலிகிதர்/கணனிப் பிரயோக உதவியாளர் இன்றி செயற்படுகிறது. இந்த பதவிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

| 05. உள்ளூர் மாணவர் விபரம் 31.12.2012 இல் உள்ளபடி | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| துறை | கற்கைநெறி | மொழிமூலம் | 2009ம் வருடத்தின் மாணவர் தொகை | 2010ம் ஆண்டு மாணவர் தொகை | 2011ம் ஆண்டு மாணவர் தொகை | 2012ம் ஆண்டு மாணவர் தொகை | 2012ம் வருடத்தின் மாணவர் மொத்த தொகை | 2012ம் ஆண்டு பட்டம் பெற்ற மாணவர் தொகை |
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | தமிழ் | 46 | 79 | 77 | 77 | 279 | 24 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | | 34 | 51 | 43 | 43 | 171 | 24 |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | | 48 | 54 | 50 | 50 | 202 | 47 |
| கட்புல கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | | 50 | 50 | 52 | 52 | 204 | 37 |
| **மொத்தம்** | | | **178** | **224** | **222** | **222** | **856** | **134** |

**குறிப்பு :** வருடாந்த மாணவர் ஒதுக்கீடு சங்கீதத்துறைக்கு 80 ஆகவும் மற்றும் ஏனைய ஒவ்வொரு துறைகளுக்கும் தலா 50 ஆகவும் காணப்படுகின்றது. நடனத்துறையைத் தவிர மற்றைய மூன்று துறைகளும் அதிக பட்ச மாணவர் அனுமதியைப் பெற்றுள்ளது.

| 06. 31.12.2012இல் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்கள் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **துறை** | **கற்கைநெறி** | **மொழிமூலம்** | **2010** | **2011** | **2012** |
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | தமிழ் | 27 | 44 | 24 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | | 18 | 20 | 24 |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | | -- | 46 | 47 |
| கட்புல கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | | -- | 06 | 37 |
| **மொத்தம்** | | | **45** | **116** | **134** |

**குறிப்பு**: முதலாவது தொகுதி மாணவர்கள் சங்கீதத்துறைக்கும், நடனத்துறைக்கும் கல்வியாண்டு 2005/2006 இல் அனுமதிக்கப்பட்டார்கள். இவர்கள் 2010 இல் பட்டத்தினை நிறைவு செய்தனர். நாடகவியல் மற்றும் கட்புலத்துறை கல்வியாண்டு 2006/2007 இல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்துறைகளின் முதலாவது தொகுதியை 2011 இல் பட்டப்படிப்பினை நிறைவு செய்தனர்.

| 07. கல்விசார் ஊழியர் விபரம் 31.12.2012 இல் உள்ளபடி | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| துறை | கற்கைநெறி | மொழிமூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | போதனாசிரியர் |
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | தமிழ் | - | - | - | - | 14 | - |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | | - | - | 01 | - | 07 | - |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | | - | - | - | - | 08 | - |
| கட்புல கலைகள | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | | - | - | - | - | 06 | - |
| நூலகம் | | | - | - | - | - | - | - |
| கணணி பிரிவு | | | - | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | | | **-** | **-** | **01** | **-** | **35** | **01** |

**குறிப்பு** : நிறுவனம் 2005 இல் ஸ்தாபிக்கப்பட்ட போது 4 போதனாசிரியர்களும் 20 தகுதி காண் விரிவுரையாளர்ளாகவும் இருந்தார்கள். 2007 இல் இந்த 4 போதனாசிரியர்களும் தகுதி காண் விரிவுரையாளர்களாக உயர்வு பெற்றுள்ளனர். 2012 இல் மொத்த கல்விசார் விரிவுரையாளர்களின் தொகை 36 ஆக உயர்ந்தது.

| 08. கல்விசாரா ஊழியர் விபரம் 31.12.2012 இல் உள்ளபடி | | | | |
|---|---|---|---|---|
| துறை | நிறைவேற்று அலுவலர் | தொழிநுட்ப அலுவலர் | எழுதுவினைஞர் மற்றும் இணைந்த அலுவலர் | சிற்றூழியர் |
| சங்கீதம் | - | - | 01 | - |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | - | - | 01 | - |
| கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் | - | - | - | - |
| நூலகம் | - | - | 02 | 01 |
| நிதி | 01 | - | 04 | 01 |
| நிர்வாகம் | 03 | 02 | 08 | 05 |
| **மொத்தம்** | **04** | **02** | **16** | **07** |

**குறிப்பு** : சு.வி.அ.க.நிறுவகம் வருடாந்த அறிக்கை 2012 வரையறுக்கப்பட்ட தொகையான கல்விசார் பதவிகள் காணப்படுவதால் வேண்டிய தொகையான பதவிகள் உருவாக்கப்பட வேண்டும்.

| 09. ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம் 31.12.2012 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | பிரசுரிக்கப்பட்டது | விற்பனைசெய்யப்பட்டது | அளிக்கை செய்யப்பட்டது |
| a. ஆய்வுகளின் எண்ணிக்கை | - | - | - |
| b. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | 01 | - | 01 |
| c. செய்தித் தாள்களின் எண்ணிக்கை | 01 | - | - |
| d. நூல்களின் எண்ணிக்கை | 03 | - | - |
| e. கட்டுரைகளின் எண்ணிக்கை | - | - | - |
| f. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **05** | **-** | **01** |

**குறிப்பு** : 36 கல்விசார் ஊழியர்களில் தகுதிகாண் விரிவுரையாளர்கள் தொகை 29 ஆக உள்ளது. கல்விசார் ஊழியர்கள் 2010 தொடக்கம் தங்களது ஆய்வுகளை M Phil/Ph. D. நிகழ்ச்சிகளில் மேற்கொண்டுள்ளனர்.

| 10. நிகழ்ச்சி திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறை விபரங்கள் 31.12.2012 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | பின்பற்றியது | நிறைவுசெய்யப்பட்டது | அளிக்கை செய்யப்பட்டது |
| a. பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | 01 | - | - |
| b. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| c. பட்டப்பயில் நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | **07** | - | - |
| d. டிப்ளோமா நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| e. சான்றிதல் நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| f. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **08** | - | - |

**குறிப்பு** : கல்விசார் ஊழியர்களில் 07 பேர் கலாநிதிப் பட்டப் படிப்பையும் 01 உதவி நூலகர் முதுமானிப் பட்டப்படிப்பை மேற்கொள்கின்றார்கள்.

| 11. பெறப்பட்ட விருதுகள் பற்றிய விபரங்கள் 31.12.2012 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் உத்தியோகத்தர் | மாணவர் எண்ணிக்கை |
| a. உள்ளூர் விருதுகள் | - | - | - |
| b. தேசீய விருதுகள் | | - | 02 |
| c. சர்வதேச விருதுகள் | 01 | 01 | - |
| d. ஏனையவை | - | -- | - |
| **மொத்தம்** | **01** | **01** | **02** |

**குறிப்பு** : கட்புலத் துறையில் கல்விசார் ஊழியர் ஒரு சர்வதேச விருதையும், இரண்டு சர்வதேச விருதையும் பெற்றுள்ளார்.

| 12. மீண்டெழும் செலவீனங்கள் பற்றிய விபரங்கள் 31.12.2012 இல் உள்ளபடி | | |
|---|---|---|
| விடயம் | 2011Rs. | 2012Rs. |
| a. ஊழியர் ஊதியம் | 26,875,134.61 | 32,873,382.66 |
| b. போக்குவரத்து | 318,808.00 | 211,933.00 |
| c. நிரம்பல் | 3,266,192.90 | 3,354,262.57 |
| d. பராமரிப்பு | 188,644.57 | 1,045,978.52 |
| e. ஒப்பந்த சேவைகள் | 8,378,590.86 | 11,137,619.11 |
| f. ஏனையவை | 1,491,013.36 | 2,681,065.59 |
| **மொத்தம்** | **40,518,384.30** | **51,304,241.45** |

**குறிப்பு** : மாணவர் அனுமதி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பாதுகாப்பு சேவை மற்றும் ஒப்பந்த சேவைகள் தொடர்பான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

| 13. மூலதன செலவீனங்கள் பற்றிய விபரங்கள் 31.12.2012 இல் உள்ளபடி | | |
|---|---|---|
| விடயம் | 2011 Rs. | 2012 Rs. |
| a. தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு | 9,115,318.73 | 1,882.896.00 |
| b. இயந்திரங்கள் கொள்வனவு | - | 75,376.48 |
| c. கட்டடங்கள் மற்றும் கட்டமைப்பு கொள்வனவு | 3,466,749.38 | 6,034,606.36 |
| d. ஏனையவை | 1,195,813.23 | -- |
| **மொத்தம்** | **13,777,881.34** | **7,992,878.34** |

**குறிப்பு** : அதிகரிக்கப்பட்ட மாணவர் அனுமதியின் காரணமாக அம்மாணவர்களுக்கான இருப்பிட வசதி, தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவுக்கான செலவுகள், கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக் கொள்வனவு தொடர்பான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

| 14. செயற்டதிட்டங்கள் பற்றிய விபரங்கள் (உள்ளூர்/வெளிநாட்டு நிதியுதவி) 31.12.2012 இல் உள்ளபடி | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் மற்றும் விபரங்கள் | கடன்/ மானியம் | நிதி வழங்கிய நிறுவனம் | TCE Rs. | RFA Rs. | DF Rs. |
| HETC | மானியம் | உலக வங்கி | 15 M | - | - |
| - | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **-** | **-** | **15 M** | **-** | **-** |

**குறிப்பு** : சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணைக்காக உலகவங்கியின் உதவித் திட்டத்தினால் (HETC திட்டம்) கிடைக்கப்பட்ட 15 மில்லியன் தகவல் தொழில்நுட்பவியல், ஆங்கிலமொழி அபிவிருத்தி, மென்பொருள் மற்றும் சமூக ஒற்றுமை போன்றவற்றை விருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது.

| 15. செயற்திட்ட செலவீனங்கள் பற்றிய விபரங்கள் (உள்ளூர்/வெளிநாட்டு நிதியுதவி) 31.12.2012 இல் உள்ளபடி | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | TCE Rs. | 2011 இல் செலவீனங்கள் | 2012 இல் Rs. செலவீனங்கள் | 31.12.2012 இல் திரட்டிய செலவீனங்கள் | பௌதீக விருத்தி வீதம் |
| | **15 M** | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **15 M** | - | - | - | - |

**<u>குறிப்பு</u> :** ஒதுக்கப்பட்ட நிதி காலதாமதமாகக் கிடைத்தாலும் தற்போது நிதி குறிப்பிட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது.

| 16. நிதி விருத்தி பற்றிய விபரங்கள் (செலவீனங்கள்) 31.12.2012 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | 2012 க்கான வழங்கல் Rs. | 2012 இல் செலவீனங்கள் Rs. | சேமிப்பு/ மிகை Rs. |
| a. செயற்திட்டம் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள் | **57,500,000.00** | **51,304,241.45** | **6,195,758.55 Saving** |
| b. செயற்திட்டம் தவிர்ந்த மூலதன செலவீனங்கள | **18,299,000.00** | **7,992,878.84** | **10,207,121.16 saving** |
| c. செயற்திட்டம் - உள்ளூர் நிதியுதவி | -- | -- | |
| d. செயற்திட்டம் - வெளிநாட்டு நிதியுதவி | -- | -- | |
| **மொத்தம்** | **75,799,000.00** | **59,297,120.29** | **16,402,879.71** |

**<u>குறிப்பு</u> :** மாணவர் அனுமதி அதிகரிக்கப்பட்ட விகிதத்திற்கேற்ப செயற்றிட்டம் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள் உரிய வீதத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

| 17. நிதி விருத்தி பற்றிய விபரங்கள் (ஏற்படுத்தப்பட்ட வருமானம்) 31.12.2012 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| வருமானத்திற்கான மூலம் | 2012 க்கான வழங்கல் Rs. | 2012 இல் வசூலித்தல் | பற்றாக்குறை / உபரி Rs. |
| a. பட்டப்பயில் கற்கை நெறிகள் | **895,000.00** | **212,150.00** | **682,850.00 உபரி** |
| b. பட்டப்பின் படிப்பு | - | - | - |
| c. ஆலோசனை வழங்கல் | - | - | - |
| d. ஏனையவை | **1,120,000.00** | **147,508.52** | **942,492.00 பற்றாக்குறை** |
| **மொத்தம்** | **2,015,000.00** | **359,658.52** | **1,625,342.00** |

**<u>குறிப்பு</u> :** நிறுவகத்தினால் கட்டணம் பெறும் கற்கைநெறிகள் எதுவும் நடைபெறுவதில்லை. மாணவர் பதிவின் மூலம் கிடைக்கும் பதிவுக்கட்டணம் மாத்திரம் தற்போது வரவாக உள்ளது.

| 18. நிதி பெறுபேறு ஆய்வு 31.12.2012 இல் உள்ளபடி | | |
|---|---|---|
| விடயம் | **சூத்திரம்** | செலவீனங்கள் / ஒரு மாணவருக்கு **Rs.** |
| a. மீண்டெழும் செலவீனங்கள் / ஒரு மாணவருக்கு (RE) | RE/ மாணவர் எண்ணிக்கை | 72,236.18 |
| b. மூலதன செலவீனங்கள் / ஒரு மாணவருக்கு (CE) | CE/ மாணவர் எண்ணிக்கை | 22,864.32 |
| **மொத்தம்** | | **95,100.50** |

**குறிப்பு** : கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் மாணவர் அனுமதி அதிகரித்ததன் காரணமாக ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவீனங்கள் மற்றும் மூலதனச் செலவீனங்கள் குறைவடைந்துள்ளது.

ஈஎன்/பீரீ/பீ/எஸ்வீஜஏஎஸ்/எவ்எஸ்/2012 2013 யூன் 19

CHECKED / RETURNED
Signature:
Name: M. Jeevathayaparan

பணிப்பாளர்,

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

**சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திவெம்பர் 31 இல உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல்கள் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றைக் கொண்ட 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் 111 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைகழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 39,226,933 கூட்டுமொத்தக் தொகையான நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வின் அடிப்படையிலான பெறுமதியில் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக பதிவேட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) சுவாமி விபுலானந்தா இசை மற்றும் நடனக் கல்லூரியின் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி மீளமதிப்பீடு செய்யப்பட்டு நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.



CHECKED

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் நிறுவகத்தின் நடவடிக்கைகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 57,500,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 3,573,872 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 42,314,778 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 1,934,894 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம் எனவே, மீண்டுவரும் மாணியத்திலேற்றபட்ட அதிகரிப்புக் காரணமாக ரூபா 5,508,766 ஆல் நிதிசார் விளைவுகளில் மேலும் ஒரு முன்னேற்றத்தைக் அது காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

தரப்பட்ட தகவல்களின் படி, நடைபெற்ற பரீட்சைகளில் பட்டதாரி மாணவர்களின் செயலாற்றல் கீழே தரப்படுகின்றன.

| பீடம் | பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| இசை | 45 | 44 |
| நடனம் | 56 | 54 |
| நாடகம் மற்றும் அரங்கம் | 90 | 82 |
| கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் | 06 | 06 |
| மொத்தம் | 197 | 186 |

(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்

நிறுவகத்தின் நான்கு பாடநெறிகளுக்காகப் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 796 ஆகும். மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மொத்த மீண்டு வரும் செலவினம் ரூபா 54,285,237 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான ஒரு மாணவரிற்கான சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 68,198 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒரு மாணவரிற்கான கிரயம் ரூபா 8,334 ஆல் அதிகரித்திருந்த்து.

(இ) மகா பொல மற்றும் உதவிப்பணங்கள்

மீளாய்வாண்டில் 583 மாணவர்களிற்கு உதவிப்பணமாக ரூபா 7,825,200 தொகை செலுத்தப்பட்டதுடன் 55 மாணவர்களிற்கு ரூபா 472,500 தொகை மாஹாபொலவாகவும் செலுத்தப்பட்டது.

4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2011 ஆம் ஆண்டில் பல்வேறு வழங்குனர்களின் பெயரில் பிறப்பிக்கப்பட்ட ரூபா 3,622,315 பெறுமதியான 14 காசோலைகள் நிறுவகத்தின் ஒரு உத்தியோகத்தரால் மட்டக்களப்பில் தனியார் வங்கியில் பேணப்பட்ட அவரின் வங்கிக் கணக்கினூடாக மோசடியாகக் காசாக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகம் முன்னைய ஆண்டில் ரூபா 4,183,728 கிரயத்தில் தரை விரிப்புக்கள், முக்காலிநிலைகள், சிற்ப வேலை உருளைகள் மற்றும் அடுக்குக் கட்டில்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு சதுர அடி தரை விரிப்பு ரூபா 480 என்ற உயர்ந்த விலை வீதத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஒரு சதுர சமதரை வரிப்பு ரூபா 60 வீதம் அதே நேரத்தில் கொள்வனவு செய்திருந்தது.



CHECKED

(ii) சிரேஷ்ட உதவி நிதிளரால் 7 தெரிவு செய்யப்பட்ட தரைவிரிப்பு வழங்குனர்களிற்கு கேள்வி ஆவணங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், காத்தான்குடியிலுள்ள ஒரு வழங்குனர் ஒரு பொய்யான பெயருடனும், இரண்டாவது வழங்குனர் வாகன சேவை நிலையம் மற்றும் வெல்டிங் கராஜாக இருந்தது. மட்டக்களப்பிலுள்ள இன்னொரு வழங்குனர் ஒரு வெல்டிங் வேலைத்தளமாகும்.

(iii) எழுபது எண்ணிக்கையான முக்காலி நிலைகள் ஒவ்வொன்றும் ரூபா 14,000 ஆக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின்படி சந்தையில் நிலவிய உண்மையான விலை ஒவ்வொன்றிக்கும் ரூபா 7,000 ஆகும். இது தொடர்பில் ரூபா 490,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பிரதேச செயலக சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் ஆரையம்பதி பிரதேச சபையின் அறிக்கைகளின் படி, முக்காலி நிலைகள் கொள்வனவு செய்யப்பட்ட வேலைத்தளம், ஒரு வெல்டிங் கராஜ்ஜாகும்.

(v) சிரேஷ்ட உதவி நிதியாளரால், தெரிவு செய்யப்பட்ட ஏழு வழங்குனர்களிற்கு கேள்வி ஆவணங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், ஐந்து கேள்விதாரர்கள் வெல்டிங் வேலைத்தளங்களாக இருந்ததுடன், உள்ளுராட்சி சபையின் வருமான உத்தியோகத்தருடன் மேற்கொண்ட நேரடிப் பரிசோதனையின் படி, ஒரு வெல்டிங் வேலைத்தளம் மரத்தளபாடங்களதுவும் செய்வதில்லை என்பதாகும்.

(vi) 2008 ஆம் ஆண்டில் மூடப்பட்ட மொறட்டுவையிலுள்ள ஒரு தனியார் கடையிலிருந்து ரூபா 1,230,000 இற்கு அடுக்குக் கட்டில்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதே முகவரியில் 2 ஆண்டுகளிற்கு மேலாக புதிய வர்த்தக நிறுவனமொன்று (புடவைத்தொழில்) இயங்கிவருகின்றது.

(vii) அடுக்குக் கட்டில்களின் கொள்வனவினை ஆதாரப்படுத்துவதற்கு மோசடியான சிட்டைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(viii) முப்பது அடுக்குக் கட்டிடங்கள் ஒவ்வொன்றும் ரூபா 41,000 ஆகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், வழங்குனரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின்படி, சந்தையில் நிலவிய விலை ஒவ்வொன்றும் ரூபா



CHECKED

30,000 மாத்தரமேயாகும். இது தொடர்பில் ரூபா 330,000 ஆன மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ix) சிற்ப வேலை உருளைகள் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களிற்கு வித்தியாசமான விளக்கவுரைகள் அனுப்பியிருந்தன.

(x) வழங்குனர் ஒவ்வொன்றும் ரூபா 21,500 என்ற உயர்ந்த விலை வீதத்தில் சிற்ப வேலை உருளைகளை வழங்கியிருந்தார். ஆனால் நிலவிய சந்தை விலை ஒவ்வொரு சிற்ப வேலை உருளையும் ரூபா 10,000 ஆகும். இது தொடர்பில் ரூபா 575,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிறுவகமானது உண்மையான தேவை மற்றும் உண்மைத்தன்மையை கருத்திற்கொள்ளாது ரூபா 1.27 மில்லியன் கிரயத்தில் 91 போலியான / நகல் ரோனர்களைக் கொள்வனவு செய்திருந்தது. இதன் விளைவாக அந்தரோனர்கள் நிறுவனத்தின் களஞ்சியத்தில் ஒரு ஆண்டிற்கு மேல் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொள்வனவு செய்யப்பட்ட பின்வரும் நுகர்வுப் பொருட்கள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

| பொருள் | அளவு |
|---|---|
| நுளம்புத் திரி | 465 பைக்கற்றுக்கள் |
| லைசால் கிருமி நாசினி | 662 போத்தல்கள் |
| கார்பிக் | 944 போத்தல்கள் |
| கை கழுவும் கிருமி நாசினி | 107 போத்தல்கள் |
| நுளம்பு திரவ மீள் நிரப்பி | 90 போத்தல்கள் |
| காற்று அழுந்திகள் | 124 போத்தல்கள் |
| டிவீடீ இருவெட்டுக்கள் | 900 எண்ணிக்கை வீசிடி இறுவட்டுக்கள் |
| வீசீடி இருவெட்டுக்கள் | 309 எண்ணிக்கை |

(உ) 2009/2010 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட கணிப்புச் சபை 102 எண்ணிக்கையான பெறுமதிமிக்க இசை மற்றும் நடன உபகரணங்களின்



CHECKED

குறைவை அறிக்கை செய்திருந்தது. எனினும், குறைவுகளிற்கான பொறுப்பை தீர்மானிப்பதற்கும் நட்டங்களை அறவிடுவதற்கான பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கும் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 5.1 கூட்டுத்திட்டம் மற்றும் நடவடிக்கைத்திட்டம்

நிறுவகம், 2010 – 2015 காலப்பகுதிக்காக ஒரு கூட்டுத்திட்டத்தைத் தயாரித்திருந்த போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஃடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரகாரம் அது போதிய தகவல்களைக் கொண்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கிடையில் பாரிய வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டமையால், முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) கொள்வனவுகள்

(இ) நிதி முகாமைத்துவம்

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*s.y*



CHECKED